# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2018ஆம் ஆண்டு மே மாதம் 2 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 02.05.2018 | 1) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ள 5 கிராம பஞ்சாயத்து பகுதிகளில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளம் மற்றும் சாலைகளில் தேங்கும் மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்வதற்கு சீரான வாறுகால் வசதி இல்லாததால், மேற்கண்ட பகுதிகளை இணைத்து ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டுவதற்கு ஏதுவாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா.ந6) அரசாணை (டி) எண்.6 நாள் 23.01.2018 அரசாணையில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணியினை உலக வங்கி நிதி ஆதாரத்துடன் தமிழ்நாடு நகர்ப்புற நிதி ஆதார வளர்ச்சி திட்டத்தின் (TNUSDP) கடன் மற்றும் மான்யம், உள்ளாட்சி பங்கு தொகையுடன் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள விபரப்படி முதல் கட்ட (Phase-I) பணிகளாக செயல்படுத்த ரூ. 96.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணையிட்டு உத்திரவு பிறப்பித்துள்ளது. | 82) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| வ.எண் | நிதி ஆதாரம் | தொகை | சதவீதம் (%) |
|---|---|---|---|
| 1 | கடன் தொகை (தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி) (TNUDF) உலக வங்கி நிதியுதவியுடன் (TNUSDP) | 9.61 | 10 % |
| 2 | மான்யம் ( Project Substainability Grant Fund-PSGF) உலக வங்கி நிதியுதவிடன் (TNUSDP) | 76.90 | 80% |
| 3 | மாநகராட்சிப் பங்கு தொகை | 9.61 | 10% |
| | **மொத்தம்** | **96.12** | **100%** |

| | | |
|---|---|---|
| | மேற்காணும் அரசாணையின்படி கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள விபரப்படி முதல்கட்ட பணிகளாக 6 சிப்பப்பணிகளாக செயல்படுத்த தொழில்நுட்ப வல்லுநர் மெசர்ஸ் சன்கான் நிறுவனத்தால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. | |

| வ.எண் | சிப்பம் எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடி) |
|---|---|---|---|
| 1 | 1 | காலாங்கரை ஓடை முதல் பெரியபள்ளம் ஓடை வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் அதனை சார்ந்த பணிகள் (NH 45B) | 12.95 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 2 | காலாங்கரை, கழுகுபாதை, கழுதை பாதை ஓடை முதல் சி.வ.குளம் வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 9.44 |
| 3 | 3 | சி.வ.குளம் மறுசீரமைப்பு செயதல் முள்ளிக்குளம் மேம்படுத்துதல் பணி மற்றும் அதனை சார்ந்த பணிகள் | 17.50 |
| 4 | 4 | சி.வ.குளம் முதல் மீளவிட்டான் சாலை வழியாக மழைநீர் கட்டும் பணி மற்றும் அதனை சார்ந்த பணிகள் | 14.04 |
| 5 | 5 | செங்குளம் ஓடை முதல் உப்பாறு ஆறு வரை வடிகால் கட்டும் எண் (NH -7A) | 24.81 |
| 6 | 6 | முள்ளக்காடு ஓடையில் வடிகால் கட்டும் பணி | 6.29 |
| | | | 85.03 |
| | | இதர இனங்கள் | 11.09 |
| | | **மொத்தம்** | **96.12** |

மேற்காணும் பட்டியலில் சிப்பம் எண்.1 மற்றும் 5க்கான பணிகள் NH-45B மற்றும் NH-7A பகுதிகளில் வருவதால், தேசிய நெடுஞ் சாலைத்துறை அனுமதி பெற்று செயல்படுத்துவதின் காரணமாக 23.02.2018ஆம் தேதி முதன்மை பொது மேலாளர், தொழில்நுட்பம், இந்திய தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையம், மதுரை மண்டல அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற உயர்மட்ட அலுவலர்கள் கூட்டத்தில் NH-45B மற்றும் NH-7A ஆகிய இருபகுதிகளிலும் சிப்பம் எண்.1 மற்றும் 5 ல் கண்டுள்ள பணிகளை RCC closed rectangular drain with RCC cover slab அமைத்து கொள்ள அதற்கான உரிய அனுமதி வழங்கலாம் என முதன்மை பொது மேலாளர், தொழில்நுட்பம், இந்திய தேசிய நெடுஞ்சாலைதுறை, மதுரை அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அதற்கான திருத்திய மதிப்பீடு தேசிய நெடுஞ்சாலை தரத்தில் தயார் செய்யும்படி தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு சேவை நிதிநிறுவன முதுநிலை மேலாளர் மற்றும் மேற்படி பணியின் திட்ட வல்லுநர் மெசர்ஸ் சன்கான் நிறுவனத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டது.

எனவே அதன்பேரில் முதல்கட்ட பணிகளான 6 சிப்பப்பணிகளில் 4 சிப்ப பணிகளை செயல்படுத்த 2017–18ஆம் ஆண்டுக்கான விலைவிகிதப்படி திருத்திய மதிப்பீடு பின்வரும் பட்டியலில் கண்டுள்ள விபரப்படி தயார் செய்யப்பட்டு தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை எண்.9592/2017/டிஓ1 நாள் 20/04/2018 இல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**பட்டியல்–1**

| வ.எண் | சிப்பம் எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடி) |
|---|---|---|---|
| 1 | 2 | காலாங்கரை, கழுகுபாதை, கழுதை பாதை ஓடை முதல் சி.வ.குளம் வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 12.20 |
| 2 | 3 | சி.வ.குளம் மறுசீரமைப்பு செயதல் முள்ளிக்குளம் மேம்படுத்துதல் பணி மற்றும் அதனை சார்ந்த பணிகள் | 11.50 |
| 3 | 4 | சி.வ.குளம் முதல் மீளவிட்டான் சாலை வழியாக மழைநீர் கட்டும் பணி மற்றும் அதனை சார்ந்த பணிகள் | 11.60 |
| 4 | 6 | முள்ளக்காடு ஓடையில் வடிகால் கட்டும் பணி | 6.85 |
| | | **மொத்தம்** | **42.15** |

| பட்டியல் – 2 | | | | |
|---|---|---|---|---|
| வ.எண் | சிப்பம் எண் | பணிகளின் பெயர் | ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை (ரூ.கோடி) | திருத்திய மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடி) |
| 1 | 1 | காலாங்கரை ஓடை முதல் பெரியபள்ளம் ஓடை வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் அதனை சார்ந்த பணிகள் (NH-45B) | 12.95 | 75.00 |
| 2 | 5 | செங்குளம் ஓடை முதல் உப்பாறு ஆறு வரை வடிகால் கட்டும் பணி (NH-7A) | 24.81 | 65.00 |
| | | **மொத்தம்** | **37.76** | **140.00** |
| பட்டியல் 3 | | | | |
| வ.எண் | சிப்ப பணிகளின் விபரம் | | | திருத்திய மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடி) |
| 1 | சிப்பம் எண். 1 முதல் 6 வரைக்கான திருத்திய மதிப்பீட்டுத்தொகை (பட்டியல் 2 மற்றும் 3ல் கண்டுள்ளவாறு | | | 182.15 |
| 2 | சிப்பம் 1 முதல் 6க்கான பணிகளுக்கு ஏற்கனவே அரசு அனுமதி வழங்கப்பட்ட தொகை (பார்வை 3ல் கண்டுள்ள அரசாணை) | | | 96.12 |
| | **மீத தொகை** | | | **86.03** |
| | எனவே பட்டியல் 2ல் கண்டுள்ள சிப்பம் எண்.1 மற்றும் 5க்கான பணிகளை பார்வை 3ல் கண்டுள்ள அரசாணையின்படி ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை போக கூடுதல் மதிப்பீட்டுத்தொகை ரூ. 86.03 கோடி நிதியினை ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், திருத்திய நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் மூலமாக பிரேரணை சமர்ப்பிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3209/2015 W(SWD) | | | |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் வீடுகள் தோறும் சேகரமாகும் கழிவு நீரினால் தொற்று நோய்கள் ஏற்படாவண்ணம். சுற்றுச்சூழலை பாதுகாத்திடவும் பொது மக்களின் சுகாதாரத்தை பேணி காக்கும் பொருட்டு ரூ. 46.40 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண். (டி) 419 நாள் 18.10.2005இல் அரசாணை வரப்பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டது.<br><br>இந்நிலையில் இம்மாநகராட்சிப் பகுதியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத்திட்டப்பணிக்கு அமைக்கப்படவுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை தருவைக்குளம் பகுதியில் மாற்றியமைக்க தயார் செய்யப்பட்ட திருத்திய திட்ட மதிப்பீடு ரூ. 95.00 கோடிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துரை அரசாணை (டி) எண். 448, நாள் 11.11.2011இல் இரண்டாவதாக திருத்தியமைத்த அரசாணை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி | | | 83)<br>அலுவலகக் குறிப்பு அ பதிவு செய்யப் பட்டது.<br>அலுவலகக் குறிப்பு ஆ அனுமதிக்கப்பட்டது. |

நிறுவனம் மான்யம் மற்றும் கடன் பெற்று செயல்படுத்த ஆணையிட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுரை அரசாணை எண்.10 நாள் **16.5.2017**இல் மேற்படி பாதாளச்சாக்கடை திட்டத்திற்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் தீர்தேவை, தொழிற்சாலை கழிவுநீரை மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகளை செயல்படுத்துதல், நிர்வகித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் மேலாண்மை நிறுவனத்தை நியமித்துள்ளதால் மேற்படி நிறுவனத்தின் மூலம் மேற்படி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய பணிகள் ரூ. **01.10** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண. **6184/2018/**UGSS **2**, நாள் **19.03.2018**ல் அனுமதி அளித்துள்ளதை தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட் மூலம் செயல்படுத்த **27.03.2018**இல் நிர்வாக கூட்டத்தில் தீர்மானம் எண். **02.06**இல் ஒப்புதல் செய்துள்ளது.

எனவே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தல், ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகராக செயல்பட்டு கட்டுமான பணிகள் மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளை தமிழ்நாடு குடிநீர் மேலாண்மை நிறுவனத்தின் மூலம் செயல்படுத்த இவ்வலுவலக கடிதம் எண். **இ3/11512/2007** நாள் **02/04/2018** இன் படி உத்திரவு வழங்கப்பட்டதையும் மேலும் மேற்கண்ட நிறுவனம் தயார் செய்த விரிவான திட்ட அறிக்கை மாமன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுமான பணிகள், இயந்திரங்கள் மற்றும் உரிய தளவாடங்கள் நிறுவுதல் போன்ற பணிகளுக்கு ரூ **32.99** கோடி மதப்பீடு மற்றும் அதனை **5** வருடங்களுக்கு இயக்கி பராமரிக்கும் பணிகளுக்கு ரூ **12.94** கோடி என மொத்த மதிப்பீடு தொகை ரூ **45.93** கோடி செலவினத்தை தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட், மூலம் மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மூலம் உரிய நிர்வாக அனுமதிக்கான பிரேரணை சமர்ப்பிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அ) மாமன்றம் பதிவு செய்யலாம்

ஆ) மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1/3209/2015** W (STP)

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் **02.05.2018**